**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 18.08.2025**

**OS.229/2018**

**வா.சா.1 திருமதி.புஷ்பலதா**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1997ம் ஆண்டு திருமணம் ஆனது. எனது கணவர் குடும்பத்தில் பாகம் ஆனது எனது திருமணத்திற்கு முன்பா அல்லது திருமணத்திற்கு பின்பா என்றால் திருமணத்திற்கு முன்பே பாகம் ஆகிவிட்டது. கல்யாணத்திற்கு முன்பே பாகம் ஆகிவிட்டதால் எந்தெந்த சொத்துக்கள் யார் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் எனக்கு மட்டும் சாட்சியம் அளிக்கிறேனா அல்லது எனது பசங்களுக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேனா என்றால்எனது பசங்களுக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். நாங்கள் அனைவரும் சேர்ந்து 07.09.2018 ம் தேதியில் இறந்துபோன சின்னண்ணன், சின்னாண்டி, அண்ணாமலை, ஜடையான்டி, வெங்கடேசன், தமிழரசன், இளங்கோ, மற்றும் வெள்ளையன் ஆகியோருக்கு ஒரு சட்ட அறிவிப்பை அனுப்பினோம் என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பில் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் மேலே சொல்லப்பட்ட நபர்கள் எந்த வித பிரச்சனையும் செய்யக்கூடாது என்று சொல்லி அறிவிப்பு அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். என்னிடம்

காட்டப்படும் சட்ட அறிவிப்பு தான் அவ்வாறு அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். **07.09.2018 ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பு பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 46/1. அதன் பரப்பு எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 30 சென்ட். 07.09.2018 ம் தேதி அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பில் மேற்படி சர்வே எண். அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள சர்வே எண்.46/1 ல் கண்ட சொத்தை யார் தற்போது விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் இளங்கோ என்பவர் வாங்கியுள்ளார். இளங்கோ என்பவர் சர்வே எண்.46/1 ல் உள்ள சொத்தை மட்டும் தான் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். இளங்கோ என்பவர் வாங்காத சொத்திற்கு எதற்காக 07.09.2018 ம் தேதியில் சட்ட அறிவிப்பு அவருக்கு கொடுக்கப்பட்டது என்றால் அவர் அன்றைய தேதியில் சொத்தை வாங்கிக்கொண்டார் என்பதற்காக தான் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. இளங்கோ என்ன வேலை செய்கிறார் என்றால் ஆசிரியராக வேலை செய்கிறார்.

3. 2ம் வாதி ராசுகுமார் எனது மகன் என்றால் சரிதான். நான் 01.10.2018 ம் தேதியில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், தருமபுரி, மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர், அரூர், தலைமைஆசிரியர், அரசு தொடக்கப்பள்ளி கோட்டப்பட்டி ஆகியோருக்கு இளங்கோ மீதும் அவரதுமனைவி ராணி பெயரிலும் ஒரு புகார் அனுப்பினேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 01.10.2018 ம் தேதியிட்ட அறிவிப்பு மேற்படி

நான் அனுப்பிய அறிவிப்பு என்று சொன்னால் சரிதான். **01.10.2018 ம் தேதியிட்ட அறிவிப்பு பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பாகப்பிரிவினையின் போது எங்களுக்கு எந்தெந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் எங்களுக்கு எந்த சொத்தும் ஒதுக்கப்படவில்லை. 07.09.2018 ல் அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் நாங்கள் விலைக்கு வாங்கிய சொத்துக்களா என்றால் ஆமாம். அவ்வாறு கிரையம் பெற்ற சொத்துக்கான கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். நாங்கள் கிரையம் வாங்கிய சொத்திற்கும், சின்னண்ணன், ராணி, இளங்கோ ஆகியோருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் சர்வே எண்.46/1 சர்வே நிலம் தான் சம்மந்தமானது அதை நாங்கள் ஓட்டிக்கொண்டுள்ளோம். மேற்படி சர்வே எண். 46/1 யாரிடம் நாங்கள் கிரையம் பெற்றோம் என்றால் எனது மாமனார் சின்னண்ணன் வாய்மொழி கிரையமாக எங்களுக்கு கொடுத்தது. அவ்வாறு எந்த வருடம் எனது மாமனார் சின்னண்ணன் எங்களுக்கு வாய்மொழி கிரையமாக கொடுத்தார் என்றால் தேதி, மாதம், வருடம் தெரியவில்லை, ஆனால் 15 வருடத்திற்கு முன்பு கொடுத்துவிட்டார். எனது மாமனார் சின்னண்ணனுக்கு மொத்தம் எவ்வளவு சொத்து இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்.46/1 சொத்தானது எனது மாமனார் சின்னண்ணனுக்கு எவ்வாறு வந்தது என்றால் அது பரம்பரையாக அவருக்கு வந்த சொத்து. எனது மாமனாரின் அப்பா பெயர் என்ன என்றால்

ஜடையகவுண்டர். சர்வே.எண்.46/1 சொத்தானது ஜடையகவுண்டர் மூலமாக எனது மாமனார் சின்னண்ணனுக்கு வந்ததா என்றால் ஆமாம்.

5. ஜடையக்கவுண்டர் பெயரில் சொத்துக்கள் இருந்தது என்பதை காட்ட கிரைய ஆவணங்களோ, வேறு ஆவணங்களோ அல்லது வருவாய் துறை ஆவணங்களோ ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்லக்கூடிய சர்வே எண்.46/1 சொத்தானது நான் சொல்வதுபோல ஜடையக்கவுண்டர் மூலமாக எனது மாமனாருக்கு வந்த சொத்துக்கள் கிடையாது அது அரசுக்கு சொந்தமான தரிசு நிலம் என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனாருக்கு வழக்கு சொத்தை பொறுத்து வழங்கப்பட்ட பட்டா ஏதாவது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மாமனார் இறந்துபோன 1ம் பிரதிவாதி சின்னண்ணன் 07.07.1968 ல் A.M. 59/77 ன் படி பட்டா எண் 14ன் படி வருவாய் துறையில் எனது மாமனாருக்கு தாவா சொத்தை பொறுத்து பட்டா கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

6. எனது கணவருடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால் 5 நபர்கள். யார் யார் என்றால் எனது கணவர் மணி, வெள்ளையன்,செல்வம், வேடியப்பன், எனது கணவரின் தங்கை உண்ணாமலை ஆகியோர். வெள்ளையன், செல்வம், வேடியப்பன் ஆகியோருக்கு நிலங்கள் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி நபர்களுக்கு உள்ள சொத்து அவர்கள் கிரையம் வாங்கிய சொத்தா அல்லது எனது மாமனார் கொடுத்த சொத்தா என்றால் எனது மாமனார் கொடுத்தது. எனது கணவரை

தவிர மற்ற நபர்களான வெள்ளையன், செல்வம், வேடியப்பன் ஆகியோருக்கு நிலங்கள் எனது மாமனார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவருக்கும் மற்றவர்களுக்கும் எனது மாமனார் வாய்மொழியாக பாகம் கொடுத்தாக நான் தாவாவில் சொல்லியுள்ளது சரியா என்றால் எங்களுக்கு மட்டும் தான் வாய்மொழியாக பாகம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் மற்றவர்களுக்கு கொடுத்தாக நான் சொல்லவில்லை. மற்ற நபர்களான வெள்ளையன், செல்வம், வேடியப்பன் ஆகியவர்களுக்கு என்ன சொத்து ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்தெந்த சர்வே எண் நிலம் மேற்படி நபர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. எனது மாமனார் பாகம் கொடுத்தபிறகு அவரவர்கள் தனித்தனியாக தனிக்குடும்பமாக இருந்து விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். வாய்மொழியாக கொடுக்கப்பட்ட நிலத்தை பொறுத்து அவரவர்கள் பட்டா அவர்கள் பெயருக்கு மாற்றிக்கொண்டார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து மட்டும் தான் சின்னண்ணன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சின்னண்ணன் கடைசி காலத்தில் யாருடன் வசித்து வந்தார் என்றால் எங்களுடன் தான் வசித்து வந்தார். எனது கணவர் உயிருடன் இருந்த காலத்திலும், எனது கணவர் இறந்த எந்த காலத்திலும் சின்னண்ணன் எங்களுடன் ஒன்றாக வசிக்கவில்லை, அவர் தனியாக தான் வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

8. எனது மாமனார் சின்னண்ணன் இறந்த பிறகு ஈம காரியம் யார் செய்தது என்றால் சின்னமகன் வெள்ளையன் என்பவர் செய்தார். எனது மாமனார் வயதான காலத்தில் யாரும் பராமரிப்பு செய்யாததால் அவருடைய இளைய மகன் வெள்ளையன் தான் எனது மாமனாரை கடைசி காலத்தில் பராமரிப்பு செய்தார் என்றால் சரியல்ல, நாங்கள் தான் பார்த்துக்கொண்டோம். எனது மாமனார் சொத்துக்களை எல்லாம் பாகம் கொடுத்துவிட்டு எனது மாமனார் பெயரில் வைத்திருந்த தாவா சொத்தை அவர் சொந்த பயனுக்காக வேண்டி 3ம் பிரதிவாதி ராணி என்பவருக்கு 23.08.2018 ம் தேதியில் தகுந்த மறுபயனுக்காக கிரையம் செய்து கொடுத்தார் என்றால் எங்கள் அனுபவத்தில் தான் அந்த சொத்து உள்ளது, அவ்வாறு கிரையம் செய்து கொடுத்தது எங்களுக்கு தெரியாது. எனது மாமனார் சின்னண்ணன் 2ம் பிரதிவாதி வெள்ளையனுடன் இருந்ததால்தான் தாவா சொத்தை எனது மாமனாரும், வெள்ளையனும் சேர்ந்து 3ம் பிரதிவாதி ராணிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது எங்களுக்கு வாய்மொழியாக கொடுக்கப்பட்ட பாகம், விற்பனை செய்த விவரம் எங்களுக்கு தெரியாது.

9. தாவா சொத்தை தவிர மற்ற சொத்துக்கள் யாரிடம் கிரையம் வாங்கினோம் என்றால் மாமனாருடன் பிறந்த நபர்களான அண்ணாமலை, கிருஷ்ணன் ஆகியோரிடம் இருந்து கிரையம் பெறப்பட்டது. நான் கிரையம் பெற்றதாக சொல்வது எல்லாம் பொய்யானது, நான் கிரையம் பெற்றதாக சொல்லும் சொத்துக்களை எல்லாம் எனது மாமனார் சின்னண்ணன் எங்களுக்கு கொடுத்தது, அதை தவிர இந்த தாவா சொத்து எனது மாமனார்

சின்னண்ணன் அவருக்காக வைத்துக்கொண்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே அரூர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததாகவும், தீர்ப்பாணை பெற்றதாகவும் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் இந்த வழக்கு சொத்து இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி நீதிமன்றத்தில் தீப்பாணை பெற்றதாக சொல்லி நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை அனைத்தும் இந்த வழக்கிற்கு எந்தவிதத்திலும் சம்மந்தம் இல்லாதது என்று சொன்னால் சரிதான்.

(2 முதல் 3ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.08.18 17:13:43 +0530